SRI LANKA

## இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்

# மட்டம் II பரீட்சை – ஜனவரி 2022

**(Level II Examination - January 2022)**

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

# (203) வியாபாரச் சட்டம் (BLA)

**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்**
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05
தொ.பே - 011 2 559 669

கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் வெளியீடு

# இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்

## மட்டம II பரீட்சை – ஜனவரி 2022

## (203) வியாபாரச் சட்டம்

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(மொத்தம் 25 புள்ளிகள்)

**பகுதி - A**

***வினா 01 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :***

**1.1** (3)

**1.2** (4)

**1.3** (1)

**1.4** (2)

**1.5** (2)

**1.6** (1)

***(ஒவ்வொன்றுக்கும் 2 புள்ளிகள், 12 புள்ளிகள்)***

**1.7** தவறு

**1.8** தவறு

**1.9** சரி

***(ஒவ்வொன்றுக்கும் 1 புள்ளிகள், 03 புள்ளிகள்)***

**1.10**

1. இனம், மதம், சாதி, பால், அரசியல் கருத்து, கர்ப்பமாக இருத்தல், வயது மற்றும் வலது குறைந்தோர் அடிப்படையில் பாகுபாடு காட்டாமை
2. சிறுவர் மற்றும் அடிமைத் தொழிலாளர்களை பயன்படுத்தாமை
3. ஒன்று சேருவதற்கான உரிமை (கூட்டம் கூடுவதற்கான உரிமை)
4. தனியுரிமைக்கான உரிமை
5. தொழிங்சங்கங்களில் சேருவதற்கான உரிமை
6. செய்யப்பட்ட வேலைக்க ஏற்ற ஊதியத்தினை பெறும் உரிமை
7. பணியிடத்தில் பாதுகாப்பினை பெற்றுக்கொள்ளும் உரிமை
8. பணியிடத்தில் பாலியல் துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாப்பினை பெறும் உரிமை
9. விடுமுறை பெற்றுகொள்வதற்கான உரிமை

**1.11**

1 நடுதீர்ப்பு மன்றம்

2 மத்தியஸ்த சபை

3 வர்த்தக சபைகள்

**1.12**

1 விற்பனையாளருக்கு விற்பனை செய்வதற்கான உரிமையுண்டு

2 விவரணம் செய்யப்பட்ட அல்லது விவரிக்கப்பட்ட பொருட்கள் விவரணத்தை ஒத்ததாக காணப்பட வேண்டும்.

3 பொருட்கள் குறித்த நோக்கத்தினை நிறைவுசெய்யக்கூடியதாக இருக்கவேண்டும்.

4 பொருட்கள் வணிக தரம் கொண்டதாக காணப்படவேண்டும்.

5 மாதிரிகளின் அடிப்படையில் பொருட்கள் விற்பனை செய்யப்படும்போது அவை மாதிரிகளை ஒத்ததாக காணப்படவேண்டும்.

**1.13**

1 கம்பனிகளை கூட்டிணைத்தல்

2 வணிக நாமத்தினை பதிவு செய்தல்

3 கம்பனிச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பொது மக்களுக்கு பயன்தரக்கூடிய தகவல்களை தொகுத்தல்

4 கம்பனிச் சட்டத்தின் நடைமுறை

5 பொதுமக்களுக்கு தகவல்களை பரிமாற்றுதல்

6 வணிகச் சமூகத்தில் தோன்றுகின்ற விசாரணைகள் மற்றும் அக்கறைகளுக்கு முகங்கொடுத்ததல் மற்றும் அவற்றின் முன்தோன்றுதல்

**1.14**

1 கட்டுப்பாட்டு பரீட்சை

2 உபகரணப் பரீட்சை

3 ஒருங்கிணைப்பு பரீட்சை

4 பொருளாதார யதார்த்த பரீட்சை

5 கலப்பு பரீட்சை

***(ஒவ்வொன்றுக்கும் 2 புள்ளிகள்
10 புள்ளிகள்)***

***(25 புள்ளிகள்)***

***A பகுதி முடிவு***

aat SRI LANKA

## *வினா 02 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 05 - கம்பனிச் சட்டம்***

**(அ)**
பங்குடமைச் கட்டளைச் சட்டத்தின் படி, பங்காளர்கள் பங்குடமை வியாபாரமொன்றில் ஈடுபடும்போது அவர்களின் பரிவர்த்தணை தொடர்பில் முழு தகவல்களையும் உண்மையான கணக்குகளையும் வழங்கவேண்டும் என்பதுடன் வெளிப்படைத்தன்மையினை பேணவேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பத்தில் “ஜெரி” என்பவர் பின்வரும் அவரது அடிப்படை கடமையினை மீறியுள்ளார். “ஜெரி” இனால் மீறப்பட்ட கடமைகள் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது.

➢ **<u>பங்குடமையை பாதிக்கின்ற முழு தகவல்களையும் உண்மையான கணக்குகளையும் வழங்கவேண்டும்</u>**

பங்குடமைச் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 28 படி, **அனைத்து பங்குதாரர்களும் பங்குடமை வியாபாரத்தில் வெளிப்படை தன்மையினை பேணவேண்டும்**. ஒவ்வொரு பங்காளரும் ஏனைய பங்காளர் அல்லது அவரது சட்ட பிரதிநிதிக்கு பங்குடமை வியாபாரத்தினை பாதிக்கின்ற அனைத்து விடயங்கள் தொடர்பான முழு தகவல்களையும் உண்மையான கணக்குகளையும் வழங்கவேண்டிய கடப்பாட்டினை கொண்டு காணப்படுகின்றனர். ஒரு பங்குதாரர் தகவல்களை மறைப்பதன் ஊடாக முறையற்ற இலாபத்தினை பெறுவாராயின் அது பங்குதாரரின் நம்பிக்கை கடமையை மீறிதாக கருதப்படும்.

SRI LANKA

மேற்குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் பங்குடமை வியாபாரத்தின் கீழ் கணினி மென்பொருளொன்றை பெறப்பட்ட கழிவினை மறைத்து தற்போதைய சந்தைப் பெறுமதியில் விற்பனை செய்தமையாக காட்டியமை ஊடாக, **“ஜெரி” ஏனை பங்காளர்களுக்கு உண்மையான கணக்குகளையும் முழு தகவல்களையும் சமர்ப்பிக்க வேண்டிய கடமையை மீறியுள்ளார்.**

**வழக்கு:** *பென்ட்லி எதிர் கிறவென்* (*Bently* v *Craven)*

➢ **<u>பங்குடமை வியாபாரத்தினை ஒத்த வணிக நடவடிக்கையில் ஈடுபடுவதன் ஊடாக பங்குடமையுடன் போட்டியில் ஈடுபடக்கூடாது.</u>**

பங்குடமைச் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 30 படி, **ஏனைய** பங்காளர்களின் அனுமதியின்றி **பங்குடமை வியாபாரத்தினை ஒத்த வணிக நடவடிக்கையில் ஈடுபடுவதன் ஊடாக பங்குடமையுடன் போட்டியில் ஈடுபடாமல் இருப்பது ஒவ்வொரு பங்காளரினதும் கடமையாகும்.** ஒவ்வொரு பங்காளரும் பங்குடமையில் இருக்கின்றபோதும் அல்லது பங்குடமையிலிருந்து விலகிய பின்னரும் பங்குடமையுடன் போட்டி இடக்கூடிய வியாபாரத்தில் ஈடுபடமுடியாது. போட்டி வியாபாரத்தின்

ஊடாக பெறப்படும் இலாபமானது பங்குடமை வியாபாரத்தின் ஊடாக பெறப்பட்ட இலாபமாகக் கருதப்படும். ஒரு பங்காளர் ஏனைய பங்காளர்களின் அனுமதியின்றி பங்குடமையுடன் ஒத்த இயல்பினைக் கொண்ட வியாபாரத்தினை கொண்டு நடாத்தும்போது அவ்வியாபாரத்தில் பெறப்படும் அனைத்து இலாபத்தினையும் பங்குடமை வியாபாரத்துக்கு செலுத்தவேண்டும்.

மேற்குறிப்பிட்ட சட்ட கடமையானது தீர்க்கப்பட்ட வழக்கில் வியக்கப்பட்டுள்ளது. வழக்கு: **பிலன் புரோஸ் எதிர் பிலன் புரோஸ் (*Pillan Bros* v *Pillan Bros)***

இவ்வழக்கில், 03 சகோதரர்களுக்கு இடையில் பங்கு வியாபாரம் ஒன்றினை மேற்கொண்டபோது ஒரு சகோதரர் ஒத்த இயல்பினைக் கொண்ட போட்டி வியாபாரத்தில் ஈடுபட்டார். போட்டி வியாபாரத்தின் ஊடாக பெறப்பட்ட இலாபத்தினை ஏனைய இரண்டு சகோதரர்களுடன் பகிர்ந்து கொள்ளவேண்டும் என தீர்க்கப்பட்டது.

எனவே, மேற்குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் ''**ஜெரி**'' ஒத்த வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளார். ''**ஜெரி**'' தனது சட்ட கடமையை மீறியுள்ளார்.

➢ **பங்குடமையுடன் தொடர்புடைய அனைத்து பரிவர்த்தனைகள் ஊடாகவும் பங்குடமை ஆதனத்தின் ஊடாகவும் பெறப்பட்ட அனைத்து நன்மைகள் தொடர்பான முழு தகவல்களையும் வெளியிடவேண்டும்.**

பங்குடமைக்கு உண்மையாக இருக்கவேண்டியது ஒவ்வொரு பங்குதாரரதும் கடமையாகும். அத்துடன் அத்தகைய கடமையானது பங்குடமை ஆதனத்தின் ஊடாக பெறப்படும் முறையற்ற இலாபத்தினையும் பங்குடமை ஆதனத்தின் ஊடாக தனிப்பட்ட இலாபத்தினை பெறுவதனையும் தடுக்கின்றது. பங்குடமைச் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 30 இன் கீழ் குறித்த இலாபமானது பங்குடமை கணக்குடன் சேர்க்கப்பட வேண்டும்.

**ஆகவே, இங்கு ஜெரி பங்குடமை வியாபாரத்தின் கணினி மென்பொருளை அவரது தனிப்பட்ட வியாபாரத்திற்கு பயன்படுத்தியதன் ஊடாக அவரது கடமையிலிருந்து விலகியுள்ளார்.**

வழக்கு : பதிரன எதிர் பதிரன (*Pathirana* v *Pathirana),*

***(07 புள்ளிகள்)***

**(ஆ)**

**பங்குடமைச் கட்டளைச் சட்டத்தின் பிரிவுகளான 28, 29 மற்றும் 30 ஆம் பிரிவுகளின் கீழ் காணப்படும் கடமைகளை மீறுவாராயின் கடமையிலிருந்த விலகிய பங்காளரிடமிருந்து பாதிக்கப்பட்ட பங்காளர் இழப்பீட்டினை பெற்றுக்கொள்ளலாம்.**

ஆகவே, ''டொம்'' கணினி மென்பொருளை அதிக விலையில் விற்பனை செய்வதன் ஊடாக பெறப்பட்ட இலாபத்தில் அரைவாசியினையும் பங்குடமை ஆதனத்தின் ஊடாக பெறபட்ட இலாபத்தில் அரைவாசியினையும் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவராவார். மேற்குறிப்பிட்ட



aat SRI LANKA

அனைத்து தீர்க்கப்பட்ட வழக்குகளின் ஊடாக நீதிமன்றம் முறையற்ற இலாபம் மற்றும் இரகசிய இலாபம் பங்குடமை வியாபார கணக்குடன் சேர்க்கப்படவேண்டும் என தீர்த்துள்ளது.

ஆகவே, கணினி மென்பொருளை அதிக விலையில் விற்பனை செய்வதன் ஊடாக பெறப்பட்ட இலாபத்தினை ''டொம்'' உடன் பகிர்ந்துக் கொள்ளவேண்டும்.

அத்துடன் பங்குடமை ஆதனத்தின் ஊடாக கணினி வியாபாரத்தில் பெறபட்ட இலாபமானது பங்குடமை ஊடாக பெறப்பட்ட இலாபமாகக் கருதப்படும். அத்தகைய இலாபமானது ''டொம்'' உடன் பகிர்ந்துக் கொள்ளவேண்டும். ''ஜெரி'' அவற்றை நிவர்த்தி செய்ய தவறுகின்ற பட்சத்தில் அவருக்கு எதிராக சட்ட சடவடிக்கை எடுக்கலாம்.

***(03 புள்ளிகள்)***
***(மொத்தம் 10 புள்ளிகள்)***

## *வினா 03 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 10 – வணிக சூழல் தொடர்பான குற்றங்கள்.***

**(அ)**

1) பண மோசடியினை தடுத்தல், பயங்கரவாத்திற்கான நிதியுதவியினை தடுத்தல் மற்றும் அவற்றை கண்டறிதல்
2) பண மோசடி மற்றும் பயங்கரவாத்திற்கான நிதியுதவி தொடர்பான குற்றங்களை விசாரணை செய்யவும் அவை தொடர்பில் வழக்க தொடரவும் அதிகார சபையொன்றை நிறுவுதல்
3) குறித்த நிறுவனங்கள் ஊடாக பண மோசடி மற்றும் பயங்கரவாதத்திற்கான நிதியுதவியினை தடுப்பதற்கு தேவையான அளவுகோள்களை எடுப்பதற்கு அறிவுறுத்தல்.

***(04 புள்ளிகள்)***

**(ஆ)**

**1) பதிப்புரிமை**

படைப்பாளிகளின் கலை, அழகியல் மற்றும் விழுமிய படைப்புகளுக்கு வழங்கப்படும் பொருளாதார மற்றும் விழுமிய உரிமை ''**பதிப்புரிமை**'' ஆகும்.

படைப்புக்களை மீள் புதுப்பித்தல், படைப்புகளை விற்பனை அல்லது குத்தகைக்கு விடல், பகிர்ந்தளித்தல், மக்கள் தொடர்பாடல், குறித்த படைப்புக்களை மொழிபெயர்ப்பு செய்தல் ஊடாக பதிப்புரிமையின் உரிமையாளர் தனது பொருளாதார மற்றும் விழுமிய உரிமையினை அனுபவிக்கலாம். அத்துடன் அவரது படைப்புகளுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் செயல்களை தடுக்கும் வகையில் குறித்த உரிமையை அவர் அனுபவிக்கலாம்.

**2) வியாபாரக் குறி**

ஒரு நிறுவனத்தின் பொருட்கள் மற்றும் சேவைகளை மற்ற நிறுவனத்தின் பொருட்கள் மற்றும் சேவைகளிலிருந்து வேறுபடுத்தி காட்ட பயன்படும் அடையாளமாகும். வியாபாரக் குறியானது தயாரிப்பு அல்லது பொதியிடலொன்றின் சொல், சுலோகம், பெயர் மற்றும் எழுத்துக்களின் தொகுதி, அடையாளம், வடிவமைப்பு மற்றும் படம், ஒலி அல்லது வடிவமாகக் காணப்படலாம். பொருட்களுடன் தொடர்புடைய குறிகளை பயன்படுத்துவது "**வியாபாரக் குறி**" எனப்படும்.

2003 ஆம் ஆண்டு 23 ஆம் இலக்க புலமைச் சொத்து சட்டத்தின் கீழ் குறியின் சொந்தக்காரர் பதிவுசெய்வதன் ஊடாக வியாபாரக் குறிக்கான உரிமையைப் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரக் குறியினை பதிவு செய்வதற்கான விண்ணப்பம் செய்யப்பட்ட திகதியிலிருந்து 10 வருட காலத்திற்கு செல்லுபடியாவதுடன் அதனை புதுப்பித்துக் கொள்ளலாம்.

**3) காப்புரிமைகள்**

புத்தாக்குனரின் புத்தாக்கம் ஒன்றிற்கான காப்புரிமையானது அதனை பதிவு செய்வதற்கான விண்ணப்பம் செய்யப்பட்ட திகதியிலிருந்து 20 வருட காலத்திற்கு செல்லுபடியாகும். காப்புரிமை பெற்ற புத்தாக்கமொன்றினை விற்பனை செய்தல், பயன்படுத்தல், ஏனையவர்கள் அவற்றை தயாரித்தல் என்பவற்றை தடுக்கும் வகையில் தனியுரிமையாக அரசால் வழங்கப்படுவதுடன் அது காப்புரிமையாக கருதப்படும்.

**4) கைத்தொழில் வடிவமைப்பு**

பொருட்களை அழகியல் மற்றும் அலங்கார அம்சங்கள் கைத்தொழில் வடிவமைப்பாகும். புதிய கைத்தொழில் வடிவமைப்புகளுக்கு மட்டுமே பாதுகாப்பினை பெற்றுக்கொள்ளலாம். பதிவு செய்வதற்கான விண்ணப்பம் செய்யப்பட்ட திகதிக்கு முன்னதாக உலகின் எந்த பாகத்திலும் குறித்த வடிவமைப்பு காணப்படாத சந்தர்ப்பத்திலே புதிய வடிவமைப்பாகக் கருதப்படும்.

**5) புவியியல் குறிகாட்டிகள்**

அடையாளப்படுத்தப்பட்ட பொருள் குறித்த பிரதேசத்தின் புவியியல் குறிகாட்டியினூடாக அடையாளப்படுத்தப்படுமாயின் அது குறிகாட்டியாகக் கருதப்படும். குறித்த புவியியல் அமைப்பு மற்றும் சரிதவியல் காரணமாக குறித்த பொருள் தயாரிக்கப்பட்டிருப்பின் மட்டுமே புவியியல் குறிகாட்டி ஏற்றுக்கொள்ளப்படும். அதாவது, ஒரு நாடு, பிரதேசம் அல்லது வலயத்தின் தன்மை. குறித்த பொருளின் தரம், மரியாதை மற்றும் ஏனைய விடயங்கள் குறித்த புவியியல் தன்மை காரணமாக தோற்றுவிக்கபட்டிருக்க வேண்டும்.

புவியியல் குறிகாட்டியினூடாக பொருட்களின் குறித்த பிரதேசத்தில் உருவாக்கப்பட்டதாக பொது மக்களை ஏமாற்றுவதிலிருந்து தடுக்கின்றது.

aat SRI LANKA

உதாரணம்: சிலோன் தேயிலை, அலங்கை இரத்தினக்கல், உடரட தேயிலை மற்றும் இலங்கை கறுவா (Ceylon tea, Sri Lankan Gems, Udarata Tea, Ceylon Cinnamon)

***(06 புள்ளிகள்)***
***(மொத்தம் 10 புள்ளிகள்)***

## *வினா 04 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 08 – காப்புறுதிச் சட்டம், வாடகை கொள்வனவு மற்றும் குத்தகை.***

**(அ)**

காப்பீட்டு உடன்படிக்கையானது காப்பீட்டு வட்டியினூடாக உறுதிசெய்யப்பட வேண்டும். காப்பீட்டு காரணியின் கீழ் காப்பீட்டு வட்டியினை பெற்றுக்கொள்ளுதல் காப்பீட்டாளரின் சட்ட உரிமையாகும். காப்பீட்டு உடன்படிக்கையானது காப்பீட்டு வட்டியினூடாக உறுதிசெய்யப்படாத சந்தர்பத்தில் வலிதானதொரு காப்பீட்டு உடன்படிக்கை வெளிப்படுத்தப்படாது. காப்பீடு செய்யப்பட்ட காரணப்பொருளின் அழிவு காரணமாக ஏற்பட்ட நிதி இழப்பு மற்றும் காப்பீட்டு காரணப்பொருளின் இருப்பினை நிலைநாட்ட காப்பீட்டு வட்டி அவசியமாகும்.

***Griffiths*** V ***Fleming*** எனும் வழக்கில் ஒரு நபருக்கு அவரது ஆயுளுக்கான வட்டி காணப்படுவதுடன் ஒரு வாழ்க்கை துணைக்கு மற்ற வாழ்க்கை துணையின் ஆயுளுக்கான காப்பீட்டு வட்டியினைப் பெற்றுக்கொள்ளும் உரிமை உண்டு எனத்தீர்க்கப்பட்டது.

எனவே, சரத் தனது மனைவியின் ஆயுளுக்கான சார்பாக காப்பீட்டு தொகையினைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமையுண்டு.

இருந்தபோதிலும், ***Evans*** v. ***Crooks*** வழக்கில் நீதிமன்றம் “ஒரு நபரின் சகோதரர் சார்பில் அவரது சகோதரி அல்லது சகோதரி என்ற காரணத்திற்காக மட்டும் இயல்பாக காப்பீட்டு வட்டியினை பெற்றுக்கொள்ள முடியும் என்று அர்த்தமில்லை. உயிருடன் இருக்கும் சகோதர, சகோதரிகள் மட்டுமே காப்பீட்டு வட்டியினை கோரலாம்.

எனவே, இங்கு **மாலன்** தனது அக்காவான **பிரியா** சார்பில் காப்பீட்டு வட்டியினை பெற்றுக்கொள்ள முயற்சிக்கின்றார். ஆனால் மாலனின் அக்காவின் ஆயுள் தொடர்பில் எவ்வித காப்பீட்டு வட்டியும் இல்லை. அதன் காரணமாக மாலனின் அக்காவின் ஆயுள் காப்புறுதி விண்ணப்பம் நிராகரிக்கப்படுகின்றது.

***(06 புள்ளிகள்)***

aat SRI LANKA

**(ஆ)**

காப்பீட்டு ஒப்பந்தமானது நல்லெண்ணத்துடன் உருவாக்கப்படுகின்றது. (*Uberrimae fidei*). அதன்படி, ஒரு நபர் காப்பீட்டு ஆரம்ப தொகையின் அடிப்படையில் காப்பீட்டு ஒப்பந்தத்திற்குள் எத்தனிக்க அல்லது காப்பீட்டு ஒப்பந்தத்திற்குள் நுழைய முடிவு எடுக்கும்போது காப்பீட்டாளர்கள் அனைத்து தகவல்களையும் வெளிப்படுத்தவேண்டிய கடமை காணப்படுகின்றது. இந்த கோட்பாடானது, காப்பீட்டு பரிவர்த்தனைகள் ஈடுபடுபவர்கள் அனைவரும் உண்மையானவர்கள் என்ற பொதுவான உத்தரவாதத்தை ஏற்படுத்துகின்றது. உண்மையான தகவல்களை வெளிப்படுத்த தவறும் போது காப்பீட்டு ஒப்பந்தம் வலிதற்றதாகின்றது. ஒப்பந்த கருத்தேற்பு பற்றிய தவறான சித்தரிப்புகள் ஒப்பந்தத்தின் நன்னோக்கத்தை முறிவடைய செய்யும். தவறான சித்தரிப்புகள் அல்லது பிறழ்பகர்வானது வேண்டுமென்றோ அல்லது தவறுதலாகவோ எழுகின்றபோதும் அவை காப்பீட்டாளரின் நன்மைகளை பாதிக்கும்.

மேற்குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் மாலன் தனது காப்புறுதி விண்ணப்பத்தில் தனது காரினை வாகனகூடத்தில (கராஜ்) நிறுத்திவைப்பதாக குறிப்பிட்டிருந்தபோதிலும் பொதுவாக மாலன் தனது காரினை மரத்துக்கு அடியில் அல்லது வயல்வெளிக்கு அருகாமையில் நிறுத்தி வைக்கின்றார். இது தவறுதலாக செய்யப்பட்டிருப்பினும் நிகழ்வு பற்றிய பிறழ்பகர்வு (தவறான சித்தரிப்பு) காரணமாக மாலன் (*Uberrimae fidei*) நல்லெண்ண கோட்பாட்டினை மீறியுள்ளார். ஆகவே, தவறான கூற்று அடிப்படையில் காப்புறுதி நிறுவனத்தின் பொறுப்பு தட்டிக்கழிக்கப்படலாம். அத்துடன் காப்புறுதிச் சட்டத்தின் கீழ் அது நியாயப்படுத்தப்படலாம்.

மேற்குறிப்பிட்ட வகையில் காப்புறுதி நிறுவனமானது மாலனின் கோரிக்கையை நிராகரிக்கலாம்.
வழக்கு – *O'Conner* V *BDB Kirby & Company*

***(04 புள்ளிகள்)***

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

aat SRI LANKA

## *வினா 05 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 06 - கைமாற்றத்தகு ஆவணங்கள் (Negotiable Instruments)***

**(அ)**

| | மாற்றுண்டியல் (Bill of Exchange) | காசோலை (Cheque) |
|---|---|---|
| 1) | குறித்த நேரத்தில் அல்லது தீர்மானிக்கப்பட்ட எதிர்காலத்தில் செலுத்துமாறு எழுதப்படும் ஆவணமாகும். | குறித்த ஒரு காரணத்திற்காக மட்டும் எழுதப்படும். |
| 2) | பெறுநர் எப்போதும் வங்கியாளராக காணப்படமாட்டார். | பெறுநர் எப்போதும் வங்கியாளராகவே இருப்பார். |
| 3) | மாற்றுண்டியலை குறுக்கு கோடிட முடியாது. | காசோலையினை குறுக்கு கோடிடலாம். |
| 4) | மாற்றுண்டியல் ஏற்றுக்கொள்ளபட்ட ஆவணமாகும். | ஏற்றுக்கொள்ளல் காசோலையில் பொருத்தமற்றது. |
| 5) | மாற்றுண்டியலின் சொந்தக்காரர் அல்லாத ஒருவருக்கு வரைபவர் செலுத்தியுள்ள போதும் அந்த கொடுப்பனவினை செலுத்துவதிலிருந்து விலக முடியாது. | மாற்றுண்டியல் கட்டளைச்சட்டத்தின் கீழ் சொந்தக்காரர் அல்லாத ஒருவருக்கு காசோலை வழங்கப்பட்டுள்ள போதும் வரைபவருக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை கொண்டுள்ளது. |

***(03 புள்ளிகள்)***

aat SRI LANKA

**(ஆ)** மாற்றுண்டியல் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 29(1) இன் கீழ் மாற்றுண்டியல் பின்வரும் பண்புகளை கொண்டிருப்பின் காலகிரமத்தில் மாற்றுண்டியலை வைத்திருப்பவராகக் கருதப்படுவார்.

1) மாற்றுண்டியல் பூரணப்படுத்தபட்டுள்ளதுடன் செலுத்துவதற்கு பொருத்தமாயிருத்தல்
2) காலாவதியாகாத மாற்றுண்டியல்
3) ஏற்கனவே மதிப்பிழந்த ஆவணமென்று முன்னறிவித்தல் வழங்கப்படாமல் ஏற்கப்பட்டமை
4) வலிதான பிரதிபலனுக்காக பெறப்பட்டுள்ளமை
5) நல்லெண்ணத்துடன் பெறப்பட்டமை
6) பரிவர்த்தனை மேற்கொண்ட நபர் மீதான தவறான கருத்தினை தெரிந்துகொள்ளாமல் பெற்றுக்கொள்ளப்பட்டிருத்தல்.

***(04 புள்ளிகள்)***

**(இ)** வரைபவரின் பொறுப்புக்களாவன,

1) ஏற்றுக்கொள்ளக் கூடிய முறைமையில் மாற்றுண்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருப்பின் அதனை ஏற்றுக்கொள்ளவேண்டியது பொறுப்பாகும்.
2) கொடுப்பனவினை செலுத்தும் வகையில் முறையாக சமர்ப்பிக்கப்பட்டிருப்பின் பெறுனர் குறித்த கொடுப்பனவினை செலுத்துவதற்கு வரைபவர் பொறுப்பாவார்.
3) மதிப்பிழந்த ஆவணமாயின் அதன் மூலம் எற்பட்ட இழப்பினை காலகிரமத்தில் வைத்திருப்பவர் அல்லது அதனை அங்கீகரித்தவரிடமிருந்து பெற்றுகொள்ளவதற்கு வரைபவர் பொறுப்பாவார்.
4) பணம் பெறுபவர் ஒப்பந்தத்திற்குள் நுழைவதற்கான தகைமை அல்லது அவர் தொடர்பான வெளிப்படுத்துகையை வரைபவர் மறுக்கமுடியாது.

***(03 புள்ளிகள்)***
***(மொத்தம் 10 புள்ளிகள்)***

## *வினா 06 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 04 – முகவராண்மைச் சட்டம் (Law of Agency)***

**(அ)**

மேற்குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில், **சுரீகா** மற்றும் **கூல்** என்பவருக்கு இடையிலான முகவராண்மை உறவுமுறை தன்மையானது ''தேவையில் அடிப்படையில் அமைந்த முகவராண்மை'' ஆகும். குறித்த வகைப்பாட்டின் கீழ் அவசரகால நிலைமையில் முகவர் தனது முதல்வர் சார்பில் ஒப்பந்தத்தில் இணைந்துள்ளார். எனினும் அவரினால் முதல்வரின் அறிவுறுத்தல்களை பெற்றுக்கொள்ள முடியவில்லை. குறித்த முகவராண்மை தேவையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளதுடன் முதல்வர் முகவரின் செயலுக்கு கட்டுப்படுகின்றார். அத்துடன் முகவர் முதல்வரின் நன்மைக்காக அவரின் சார்பில் செயற்பட்டுள்ளார்.

பின்வரும் நிபந்தனைகள் ''தேவையில் அடிப்படையில் அமைந்த முகவராண்மை'' "agency by necessity" உருவாக்கப்பட முன்னர் திருப்திபடுத்தப்படவேண்டும்.

- மிகவும் அவசர நிலைமை காரணமாக முதல்வரின் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள முடியாமை
- நியாயமான வர்த்தக தேவையொன்று காணப்பட்டமையினால் அவ்வாறு செயற்படவேண்டியதாயிற்று.
- முதல்வரின் நன்மைக்காக முகவர் செயற்பட்டிருத்தல்
- முகவரின் செயல் நியாயமானதாகவும் விவேகமானதாகவும் காணப்படல்
- ஒப்பந்தம் நிறைவேற்றப்பட முன்னர் முதல்வரினால் முரணானதொரு அறிவுறுத்தல் வழங்கப்படிருக்காமை

இவ்வழக்கில் ***Great Northern Railway Company*** **V.** ***Swa field,*** "தேவையில் அடிப்படையில் அமைந்த முகவராண்மை" ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் பின்வரும் வழக்குகளிலும் பின்பற்றப்பட்டது.

மேற்குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் கப்பலானது நீண்ட காலமாக ஆழ்கடலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமையினால் கொள்கலன்களின் இரசாயன மாற்றத்தினை அவதானிக்க முடிந்தது. எனவே கப்பல் தலைவனான **கூல்** அவரது சொந்த கிரயத்தில் அவற்றை இந்தியாவிலுள்ள சென்னை துறைமுகத்தில் அவற்றை களஞ்சியப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்தார். அவற்றை தொடர்ந்து களஞ்சியப்படுத்துவதற்கு அவரிடன் பணம் பற்றாக்குறைக் காரணமாக இரண்டு வாரங்களுக்கு பின்னர் இரசாயன உரங்களை விற்பனை செய்ய தீர்மானிக்கின்றார். நிகழ்வுகளை ஆராய்கின்றபோது கொள்கலன்களின் ஏற்பட்ட இரசாயன மாற்றம் காரணமாக உண்மையான வணிக அவசிய நிலை **கூல்** இற்க தோன்றியுள்ளது. எனவே, **சஹீகா** சார்பில் நியாயமாகவும் விவேகமாகவும் நல்லெண்ணத்துடன் செயற்பட்டுள்ளார்.

"தேவையில் அடிப்படையில் அமைந்த முகவராண்மை" "agency by necessity" உருவாக்கப்பட இச்செயற்பாடு போதுமானதாகும். இதனூடாக **கூல்** மற்றும் **சஹீகா** இடையில் முகவராண்மை உறவுமுறைக் காணப்படுவதாக கூறலாம்.

வழக்குகள்: *Springer Vs Great Western Railway*

*Prager Vs Blackiel and Heacock Ltd*

***(07 புள்ளிகள்)***

**(ஆ)**

குறித்த வினாவானது முதல்வர் மற்றும் முகவரின் பொறுப்புக்கள் மற்றும் கடமைகளின் அடிப்படையில் வினவப்பட்டுள்ளது. முதல்வாரன **சஹீகா** முகவர் **கூல்** சென்னை துறைமுகத்தில் குறித்த இரசாயன உரத்தினை களஞ்சியப்படுத்தி வைத்திருந்தமைக்கான செலவினை செலுத்த வேண்டிய கடமை முகவராண்மை சட்டத்தின் அடிப்படையில் காணப்படுகின்றது.

***(03 புள்ளிகள்)***

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

***B பகுதி முடிவு***

aat SRI LANKA

## *வினா 07 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

*அத்தியாயம் 02 - ஒப்பந்தச்சட்டம் (Contract Law)*

**(அ)**

ஒப்பந்தச் சட்டத்தின் படி, சட்ட உறவுமுறையொன்றினை உருவாக்கும் நோக்கில் கட்சிக்காரர்களுக்கு இடையில் மேற்கொள்ளப்படும் உடன்படிக்கை ஒப்பந்தமாக வரைவிலக்கணப்படுத்தப்படும். கொடை முனைவு ஒப்பந்தத்தின் அடிப்படை கூறாகவதுடன் வலிதானதொரு கொடை முனைவு இல்லாத போது வலிதானதொரு ஒப்பந்தம் உருவாகாது.

கொடை முனைவானது ''ஒப்பந்தத்திற்கான அழைப்பு'' ஊடாக மெருகூட்டப்படுகின்றது. அழைப்பினை ஏற்றுக்கொள்ளல் மட்டுமே வலிதானதொரு ஒப்பந்தத்தினை தோற்றுவிக்காது. கலந்தாலோசிப்பதற்கான விருப்பத்தினை வெளிப்படுத்தல் ''ஒப்பந்தத்திற்கான அழைப்பு'' ஆகும். தீர்க்கப்பட்ட பின்வரும் வழக்கு தீர்ப்பினூடாக பின்வரும் சந்தர்ப்பங்கள் ''ஒப்பந்தத்திற்கான அழைப்பு'' ஆக குறிப்பிடப்படுகின்றன.

- விளம்பரங்கள் (Harris V Nikerson , Partridge v Crittenden)
- ஏல விற்பனை (Payne v Cave)
- Tenders (Spencer v Harding)
- விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ள பொருட்கள் (Fisher V Bell , Crawly v Rex)
- விடயத்தொகுப்பு (Prospectus)

மேற்குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில், **மெனிகா** அவர் கடையிலுள்ள கண்ணாடி யன்னலின் உட்புறமாக $4,000 அமெரிக்க டொலர் என விலை குறிக்கப்பட்ட விலையுயர்ந்த இரத்தினக்கல் மாலையை காட்சிப்படுத்தியிருந்தார். இத்தகைய பொருட்களை காட்சிப்படுத்துதல் ''ஒப்பந்தத்திற்கான அழைப்பு'' இன் கீழ் நோக்கப்படுவதுடன் அது கொடை முனைவிற்கான தரமாகாது. **பியூமி** இனால் செய்யப்பட்ட கொடை முனைவானது **மெனிகா** வினால் ஏற்கப்படலாம் அல்லது மறுக்கப்படலாம். எனவே **மெனிகா** மற்றும் **பியுமி** இடையில் வலிதானதொரு ஒப்பந்தம் தோன்றவில்லை.

***(05 புள்ளிகள்)***

aat SRI LANKA

(ஆ)

மேற்குறிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் **விக்டோரியா ஹோட்டல்** மற்றும் **சமன், பியுமி** இடையில் miw ஒன்றை முன்பதிவு செய்தமை ஊடாக ஒப்பந்தம் ஒன்று தோன்றியுள்ளது. இவ்வொப்பந்தத்தில் விலக்களிப்பு வாசகம் ஒன்று காணப்படுகின்றது. விலக்களிப்பு வாசகம் ஒப்பந்தத்தில் அறிமுகப்படுத்தும்போது கட்சிக்காரர்கள் சில பொறுப்புக்களை தவிர்க்கலாம். ஆகவே அத்தகைய வாசகங்கள் பொறுப்பினை விலக்கும் வாசகமாகவும் கருதப்படும்.

**<u>அட்டிகை (பதக்க மாலை) தொலைந்துவிடல்</u>**

அறைக் கதவில் ''தொலைந்துபோன அல்லது களவாடப்பட்ட பொருள்களுக்கு ஹோட்டல் முகாமை எந்த சூழ்நிலையிலும் பொறுப்பேற்காது எனும் விலக்களிப்பு வாசகம் காணப்பட்டது. தற்போது குறித்த வாசகத்திற்கு ஹோட்டல் முகாமை கட்டுப்படுகின்றதா? என்ற கேள்வி எழுகின்றது. வலிதானதொரு விலக்களிப்பு வாசகம் தொடர்பில் கட்சிகாரர்கள் அறிந்திருக்கவேண்டும். **ஒப்பந்ததிற்குள் நுழையும்போதோ இணையும் போதோ இரு தரப்பினராலும் அவை தொடர்பில் பேசப்பட்டிருக்கவேண்டும்.** அதன் அடிப்படையில், சரத் மற்றும் பியுமி குறித்த வாசகத்தை ஒப்பந்தத்தில் உள்வாங்கப்பட்ட பின்னரே குறித்த வாசகத்தை கண்ணுற்றனர். அத்துடன் ஹோட்டலிலிருந்து திரும்பிசெல்லும்போதே அவரது அட்டிகை (பதக்க மாலை) தொலைந்துவிட்டதை அவதானிக்கின்றார்.

**வழக்கு : *<u>Olley</u>* v *<u>Marlborough Court</u>***

**<u>காரின் உதிரிச் சக்கரம் காணாமற் போயிருந்தமை</u>**

**சரத்** மற்றும் **பியுமி** கார் நிறுத்தப்படும் இடத்தினை அடைந்தபோது காவலாளி கார் நிறுத்துமிடத்திற்கான வழியினை காட்டுகின்றார். ''நாங்கள் வாகனம் நிறுத்துவதற்கான இடத்தினை தனியாக வைத்துள்ளோம். எனினும் அதற்குரிய பாதுகாப்பினை வழங்குவதற்குரிய போதுமான ஊழியர்கள் எம்மிடமில்லை'' என்று காவலாளி குறிப்பிட்டார். கார் நிறுத்ததுமிடத்தினை அறிமுகப்படுத்தும் முன்னர் காவலாளியினால் விலக்களிப்பு வாசகம் வழங்கப்படவில்லை. அந்த அடிப்படையில் **சரத்** மற்றும் **பியுமி** அவர்களது காரின் உதிரிச் சக்கரம் தொலைந்து போனமை தொடர்பில் **விக்டோரியா - ஹோட்டலிடமிருந்**து நட்டத்தினைக் கோரமுடியாது.

எனவே **சரத்** மற்றும் **பியுமி** தங்களது தொலைந்துபோன பொருட்கள் தொடர்பில் நட்டஈடு கோரி ஹோட்டல் முகாமைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கலாம்.

***(07 புள்ளிகள்)***



aat SRI LANKA

**(இ)**

**<u>காரின் உதிரிச் சக்கரம் காணாமற் போயிருந்தமை</u>**

காரின் உதிரிச் சக்கரம் தொலைந்தமை தொடர்பான விலக்களிப்பு வாசகத்தினூடாக விலக்களிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஒப்பந்தத்திற்குள் நுழையும் முன்னர் அது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. காரின் உதிரிச் சக்கரம் தொலைந்தமை தொடர்பில்' **விக்டோரியா - ஹோட்டல்** பொறுப்பேற்க முடியாது.

**<u>அட்டிகை (பதக்க மாலை) தொலைந்துவிடல்</u>**

அறைக் கதவில் ''தொலைந்துபோன அல்லது களவாடப்பட்ட பொருள்களுக்கு ஹோட்டல் முகாமை எந்த சூழ்நிலையிலும் பொறுப்பேற்காது'' எனக் காணப்படும் வாசகம் விலக்களிப்பு வாசகமாக கருதப்படாது. அத்துடன் ஒப்பந்தத்திற்குள் உள்வாங்கப்பட்ட பின்னரே அவ்வாகசகம் அறிமுகப்படுத்தப்படுகின்றது. எனவே, **பியுமி** <u>அட்டிகை (பதக்க மாலை) தொலைந்தமை</u> தொடர்பில் **விக்டோரியா - ஹோட்டலிடமிருந்**து நட்டஈட்டினைக் கோரமுடியும். எனவே, **விக்டோரியா - ஹோட்டல்** முகாமை பியுமிக்கு நட்டஈட்டினை செலுத்த வேண்டிய கடப்பாடு தோன்றுகின்றது.

**வழக்கு: *Olley Vs Marlborough Court***

***(03 புள்ளிகள்)***

| ***அத்தியாயம் 03 - பொருள் விற்பனை ஒப்பந்தச்சட்டம் (The Law of the Sales of Goods)*** |
|---|

**(ஆ)**

**அமல் ராஜ்** என்பவருடன் 10,000 கிலோகிராம் சேதன உரத்தினை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தத்திற்குள் நுழைகின்றார். அத்துடன் ஒப்பந்தத்திற்குள் இணையும் முன்னரே மாதிரிகளை பரீசிலனை செய்கின்றார். எனினும் வழங்கப்பட்ட சேதன உரத்தின் தரமானது மாதிரியுடன் ஒத்துப்போகவில்லை. பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் உட்கிடையான நிபந்தனைகள் காணப்படுகின்றன.

பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 15(02) இன் சாதாரண வாசகத்தின் கீழ் விற்பனை செய்யப்படும் பொருட்கள் **வணிக தரத்துடன்** காணப்படவேண்டும் என்பதாகும். அத்துடன் பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பொருள் விவரணத்தின் படி விற்பனை செய்யப்படுமாயின் குறித்த விவரணத்துடன் விற்பனை செய்த விற்பனையாளர் குறித்த பொருளை வணிகத் தரத்துடன் விற்பனை செய்யவேண்டும் என்பது உட்கிடையான நிபந்தனையாகும். பொதுவாக விற்கப்படும் பொருள் நோக்கத்தினை பூர்த்திசெய்யக்கூடியதாக காணப்படவேண்டும்.

aat SRI LANKA

இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றில் பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 15(02) அடிப்படையில் ***G.W.P Gunawardena*** V ***Ceylon Steel corporation*** எனும் வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது.

- இவ்வழக்கில் நெற்கதிர்களை வேகவைக்கவும் உலர்த்தவும் பயன்படுத்தபடும் இயந்திரத்தில் ஆரம்பத்திலிருந்தே சொருகப்பட்ட நெற்கதிர்களில் நிறம் மாற்றப்படுவதை மாசுபடுவதையும் கண்டறிகின்றனர். எனவே, இலங்கை நீதிமன்றமானது குறித்த இயந்திரமானது வணிக தரமற்றது எனத்தீர்த்தது.

- மேலும் ***Howell*** V ***Coupland*** வழக்கில்

  வேகவைத்த மற்றும் சமைத்த நண்டுகளை விநியோகிக்கும் விற்பனையாளரிடம் வாங்குபவர் புதிய நண்டுகளை கேட்டிருந்தார். குறித்த நண்டினைக் கொள்வனவு செய்தவர் அதனை நுகர்ந்த பின்னர் நோய்வாய்ப்பட்டார். எனவே வழங்கப்பட்ட நண்டானது வணிகத்தரமற்றது என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அமலினால் கொள்வனவு செய்யப்பட்ட சேதன உரமானது பொதுவான பயன்பாட்டிற்கு பொருத்தமற்றதுடன் அவை சேதன முறை மரக்கறி பண்ணைகளுக்கு பயன்படுத்த முடியாத வகையில் இரசாயனம் கலந்த குறைந்த தரத்தினை கொண்டதாக காணப்படுகின்றது. எனவே, பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் உட்கிடை நிபந்தனையினை ராஜ் மீறியுள்ளார்.

அதேபோன்று பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 16(1) இனூடாக மாதிரிகளின் அடிப்படையில் பொருட்கள் விற்பனை செய்யப்படும்போது அவை மாதிரிகளை ஒத்ததாக காணப்படவேண்டும் என்ற உட்கிடையான நிபந்தனை காணப்படுகின்றது.
எனவே,

- வாங்குபவருக்கு மொத்தமாக பெறப்பட்ட பொருட்களை மாதிரிகளுடன் ஒப்பிட்டு பார்ப்பதற்கான நியாயமான வாய்ப்புகள் காணப்படுகின்றன.
- பொதுவாக மொத்தமாக பெறப்பட்ட பொருட்கள் மாதிரியுடன் ஒத்துபோவதாக காணப்படவேண்டும்.
- மாதிரிகளின் அடிப்படையில் வழங்கப்படும்போது பாதிப்புகள் அற்ற அல்லது குறைபாடுகளற்ற மொத்த தொகை பொருட்களை வழங்கவேண்டும்.

மாதிரிகளை நியாயமாக பரிசீலனை செய்யும்போது வெளிப்படையாக தெரியாத குறைபாடொன்று காணப்படுமாயின் விற்பனையாளர் அதற்கு பொறுப்பினை ஏற்கவேண்டும். மாதிரிகளுடன் மொத்தமாக பெறப்பட்ட பொருட்களுடன் ஒத்ததாக இருக்கவேண்டும்.

aat SRI LANKA

எனவே, ராஜ் உட்கிடை நிபந்தனையினை பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் அடிப்படையில் மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களை மீறியுள்ளார்.
ஆகவே, அமல் ராஜிற்கு எதிராக அவருக்கு ஏற்பட்ட சட்டஈட்டினைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் சட்ட நடவடிக்கைகளை எடுக்கலாம்.

வழக்குகள்: *Drummond V Van Ingen*

*Millars of Falherrk Ltd. Vs Turpie Wren Vs Holt*

***(10 புள்ளிகள்)***

***(மொத்தம் 25 புள்ளிகள்)***

***C பகுதி முடிவு***

***Notice:***

These answers compiled and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.
These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers". The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2021 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*